# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 13 புதன்கிழமை (29-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 208


# புலிகளுடன் பேச இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்!

## வாஜ்பாயிடம் கூட்டணி கோரும்

கொழும்பு, ஜூலை 29

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும்படி இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்.

இப்படி கொழும்பு வந்துள்ள இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு வலியுறுத்திக் கோரவிருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

நாளை இந்திய தூதரகத்தில் நடக்கும் வரவேற்பு வைபவத்தில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றி வாஜ்பாயுடன் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையில் இந்தியப் பிரதமரைச் சந்திக்கும்.

இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியா தனது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 9 படையினர் பலி; 19 பேர் படுகாயம்

# மாங்குளத்துக்கு வடக்கே திங்களன்று கடுஞ் சமர்!

### 5 சடலங்கள் புலிகள் ஒப்படைப்பு

மாங்குளத்துக்கு வடக்கே நேற்று முன்தினம் 'வெற்றி உறுதி' த் துருப்புக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இச்சண்டையில் 9 படையினர் உயிரிழந்தனர்; 19 படையினர் படுகாயமடைந்தனர் என்றும்—

9 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச்சண்டையின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஐந்து படையினரின் சடலங்கள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் —

சடலங்கள் வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டதாகவும்—வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3-6)

# சர்ச்சைக்குரிய செம்மணிப் பகுதி பேணிப்பாதுகாக்கப்படும் என உறுதி

### ஜெனரல் சரத் முனசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கைதடியில் பெரும் மனித புதைகுழி இருப்பதாக கூறப்படும் பிரதேசத்தில் இரகசியமான முறையில் சட்டத்துக்குப் புறம்பான அத்துமீறல் ஏதும் நடைபெற அனுமதிக்கப்படமாட்டாது. அந்த இடம் மாற்றம் ஏதுமின்றிப் பாதுகாப்பாகப் பேணப்படும்.

—இவ்வாறு உறுதியளித்திருக்கின்றார் 51 ஆவது இராணுவப் படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க.

வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள 51 ஆவது படையணியின் புதிய தளபதியாகப் பதவியேற்றுள்ள அவர் உதயன் பிரதிநிதியைச் சந்தித்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டில் 2 வாரங்கள்

# சிகிச்சை முடிந்த பின் டக்ளஸ் திரும்பினார்

கொழும்பு, ஜூலை 29

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வெளிநாட்டில் சிகிச்சையை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

களுத்துறைச்சிறைச்சாலையில் வைத்து தாக்கப்பட்டதனால் காயமடைந்த டக்ளஸ் மேலதிக சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்தார். அங்கு இருவாரங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அழுத்தத்தை கோரி பிரார்த்தனை

## இன்று வடக்கு, கிழக்கில்!

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கை இனப்பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வு எட்டுவதற்கு இந்திய அரசாங்கம் தனது நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசின் மீது அரசியல் ரீதியான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று கோரி வடக்கிலும் கிழக்கிலும் இன்று பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் இடம்பெறவிருக்கின்றன.

இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் ஆகியவற்றில் இவை இடம்பெறவிருக்கின்றன.

இன்று நண்பகல் 12 மணி முதல் 5 நிமிடம் ஆலய மணிகள் ஒரே நேரத்தில் ஒலிக்கும்.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு யாழ்ப்பாணத்திலும், ஈ. பி. ஆர். எல். எவ். ரெலோ, புளொட் ஆகியன

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் போராட்டத்தால்

# முல்லை. செயலகம் நேற்று ஸ்தம்பிதம்!

வவுனியா, ஜூலை 29

முல்லைத்தீவில் வாழும் இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு வழங்கப்படும் நிவாரணம் வெட்டப்படுவதை ஆட்சேபித்து முல்லைத்தீவுச் செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று நடத்திய போராட்டத்தால் செயலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதியில் உள்ள சுமார் 800 பேர் முல்லைத்தீவுச் செயலகத்தைச் சுற்றி வளைத்தனர்.

நேற்றுக் காலை 8 மணி முதல் இந்தப் போராட்டம் ஆரம்பித்ததால் செயலகத்துக்குள் ஒரு சில ஊழியர்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவுச் செயலகம், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியன இப்போராட்டம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் கடலிலிருந்து

# மற்றுமொரு பெண் நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

குருநகர் கடற்பிராந்தியத்திலிருந்து நேற்றும் ஒரு பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

இதற்கிடையில் —

அக்கடற் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலம் நேற்று அடையாளம்காணப்பட்டது.

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச் சேர்ந்தவரும் வன்னியிலிருந்து குடாக் கடலூடாக குருநகர் இறங்குதுறைக்கு வரமுயன்ற சமயம் நீரில் மூழ்கி இறந்தவர்களில் ஒருவருமான செல்வி அ. இந்துமதி (வயது 30) என்பவரே சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டார்.

இவரின் சடலம் மரண

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆறு 'சார்க்' நாடுகளினதும் தலைவர்கள் நேற்று வருகை

கொழும்பு, ஜூலை 29

கொழும்பில் இன்று நடைபெறும் 10 ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் அனைவரும் நேற்றுக் கொழும்பு வந்தடைந்தனர்.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப், மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா, பூட்டான் மன்னர் ஜிக்மே சிக்மி வான் சுக், நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா ஆகியோரே நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இத்தலைவர்கள் அனைவருக்கும் இராணுவ, விமானப்படை அணிவகுப்பு மரியாதைகள் வழங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறை[illegible] வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அச்சகப் பணியாளர் வெற்றிடம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் அச்சகத்திற்கு:

★ அச்சுக் கோப்பாளர்

★ ஒப்பு நோக்குநர் தேவை

விண்ணப்ப முடிவு திகதி — 03 — 08 — 98

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலாளர்
யாழ். மா. கூ. சபை

(சி/4417)

---

## நாகம்ஸ் சினிமா

கன்னாகம்.

அகல வெண் திரையில் ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

3 ஆவது வெற்றி வாரமாக 29 ஆம் திகதி மட்டும் சுப்பர் ஸ்டார் ரஜனி மீனா - செந்தில், வடிவேல் நடித்த

**முத்து**

காட்சிகள்:- 10-30, 2-30

(57933)

---

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

புதன், வியாழன்
விஜயகாந்த் - ரேவதி
வைதேகி

**காத்திருந்தாள்**

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
வெள்ளி, சனி
கமல் - ரஜனி - ஸ்ரீதேவி
நடித்த

**மூன்று முடிச்சு**

3 நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223

(57502)

---

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நிர்வாகக்குழுவின் கல்வி மேம்பாட்டு உறுப்பினராகிய

**கலாநிதி கா. குகபாலன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

### சண்முகம் கார்த்திகேசு

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை
நிர்வாகக் குழு உறுப்பினர், ஊழியர்கள்,
தொண்டர்கள், உறுப்பினர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.

(சி/4415)

---

சாவகச்சேரி வடக்கு - மண்டுவில்

## திருவெள்ளாறை, குமர கோட்டம்
## மஹோற்சவப் பெருவிழா

29-07-98 புதன்கிழமை பகல் 11 மணி,
கொடியேற்றம்

06-08-98 வியாழக்கிழமை பகல் 10.15 மணி
தேர்த்திருவிழா

07-08-98 வெள்ளிக்கிழமை பகல் 10 மணி
தீர்த்தத்திருவிழா

மஹோற்சவச் சிவாச்சாரியார்:

''பண்டிதர்''
**ஜெயஸ்ரீ கு. ஜெகதீஸ்வரன் குருக்கள்**
புன்னாலைக் கட்டுவன்

அனைவரும் வருக, அருள் பெறுக.

— ஆலய பரிபாலன சபை.

அருள் பெற வாழ்த்துபவர்:-

**திரு. மூ. கனகலிங்கம்**
(பிரபல சோதிடர்)
- ஆலய நிர்வாகி

(சி/4419)

---

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த

**இந்தியன்**

தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4336)

---

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா இராமலிங்கம்

(இளைப்பாறிய கணக்காளர்,
பெருந்தெருத் திணைக்களம்)

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராமலிங்கம் 27-07-1998 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம் சாரதாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜலக்ஷ்மியின் அன்புக் கணவரும், கனகம்மா, சரஸ்வதி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்துலிங்கம், மங்களேஸ்வரி, தேவதாஸ், சந்திரமதி, நாகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாஸ்கரன், ஜெயந்தி, சுகந்தி, காலஞ்சென்ற கேசவன், ஆனந்தி, வாசந்தி, ஷாமந்தி, தமயந்தி, சாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலா, திஸநாயக்கா, பாலஸ்கந்தா, சாந்தி, மகேந்திரன், ஸ்ரீதரன், யோகேந்திரன், சந்திரகுமார், திரவியலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சின்னஉப்போடை மட்டக்களப்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன். செல்லையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்
யாழ். / மத்திய கல்லூரி),
[சகோதரர்]

124/2, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(57945)

---

### கணபதிப்பிள்ளை சத்தியதேவி

அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சத்தியதேவி 28. 7. 98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அராலியூர் கணபதிப்பிள்ளையின் (இளைபாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும், கஜனாவின் அன்புத் தாயாரும், சிவகுருநாதன் (கொழும்பு), திருநாவுக்கரசு(லண்டன்), சுகுணாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29. 7. 98) புதன்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டியில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. கணபதிப்பிள்ளை
(கணவன்)

அளவெட்டி
(57935)

---

திருமதி
### பத்தினிப்பிள்ளை சதாசிவம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பத்தினிப்பிள்ளை சதாசிவம் 26. 07. 98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், தங்கரத்தினம், காலஞ்சென்ற சீவரத்தினம், மகாலிங்கம், தனபாலசிங்கம சிவயோகம், சண்முகலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தம்பிராசா, தெய்வானைப்பிள்ளை, சோபனாதேவி, சரோஜினி, முத்துலிங்கம், தனலஷ்மி, புஷ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27. 07. 98 அன்று கனத்தையில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி சோ. மகாலிங்கம்
(மருமகள்)
உபஅதிபர்
யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானா பண்டித வித்தியசாலை.

(57940)

---

## வாழ்த்துகின்றோம்

எம்முடன் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களில் வகுப்பு II இல் இருந்து வகுப்பு I -க்கும், வகுப்பு I இல் இருந்து அதிசிறப்பு தரத்துக்கும் தரமுயர்த்தப்பட்டவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

### வகுப்பு II இல் இருந்து வகுப்பு I இற்கு

**போட்டிப்பரீட்சை மூலம்**

**யாழ்ப்பாணம்**
திரு. றோ. அன்ரனி
திரு. க. கணேசவேல்

**நல்லூர்**
திரு. க. செல்வநாதன்
திரு. வ. சந்திரசேகரம்
திரு. ம. தயாபரன்
திரு. S. J. செல்லத்துரை

**வலிகாமம் மேற்கு**
திரு. S. வைத்தியநாதன்
செல்வி நவறஜனி சண்முகம்

**வலிகாமம் வடக்கு**
திரு. இ. சி. தெட்சணாமூர்த்தி

**வலிகாமம் கிழக்கு**
திரு. க. இராசதுரை

**தென்மராட்சி**
திரு. இ. சபாநாதன்
திரு. சி. தில்லையம்பலம்
திரு. பொ. குமாரசாமி

**வடமராட்சி வடக்கு**
திரு. க. அருளானந்தம்
திரு. V. K. சண்முகநாதன்

**வடமராட்சி கிழக்கு**
திரு. சி. பஞ்சலிங்கம்

**சேவை மூப்பு மூலம்**

**தீவுகள் தெற்கு**
திரு. ஆ. சபாநாதன்

**நல்லூர்**
திரு. ச. கனகலிங்கம் (ஓய்வுபெற்றவர்)

**வலிகாமம் தென் மேற்கு**
திரு. ந. பற்குணராசா
திரு. இ. நித்தியானந்தன்
திரு. சி. கந்தசாமி (ஓய்வு பெற்றவர்)
திரு. ச. சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்றவர்)

**வலிகாமம் வடக்கு**
திரு. சு. பரமசிவம் (ஓய்வுபெற்றவர்)
திரு. க. க. வேலாயுதபிள்ளை

**வலிகாமம் கிழக்கு**
திரு. P. N. செல்லத்துரை

**தென்மராட்சி**
திரு. வை. இராசரத்தினம்

**வடமராட்சி வடக்கு**
திரு. த. நந்தகுமார்
திரு. சி. சிவலிங்கம்
திரு. அ. ஞானச்சந்திரன்
திரு. சோ. சிவராசன்

வகுப்பு I இல் இருந்து அதி சிறப்பு தரத்துக்கு சேவை மூப்பு மூலம் வலிகாமம் தெற்கு வலிகாமம் கிழக்கு திரு. வெ. சின்னத்துரை

கிராம உத்தியோகத்தர் சங்கங்களின்
ஒருங்கிணைப்புக் குழு,
யாழ்ப்பாணம்.

(57938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹுன்செனின் மக்கள் கட்சி கம்போடியாவில் வெற்றி!

நொம்பென் ஜூலை 29
கம்போடியாவில் ஹுன் செனின் கம்போடிய மக்கள் கட்சி அமோக வெற்றியீட்டி இருப்பதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அதிகார பூர்வ முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

122 உறுப்பினர்களைக் கொண்ட கம்போடிய நாடாளுமன்றத்தில் ஹுன் சென் தலைமையிலான கம்போடிய மக்கள் கட்சி 66 ஆசனங்களைக் கைப்பற்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானினால் தயாரிக்கப்பட்ட சமரசத் திட்டம் ஒன்றின் கீழ் கடந்த ஞாயிற்றுக் கிழமை கம்போடியாவில் தேர்தல் நடத்தப்பட்டது தெரிந்ததே.

இந்தத் தேர்தலில் கம்போடிய மக்கள் கட்சி, ரணரிட் தலைமையிலான பன்சின்பெக் கட்சி மற்றும் கெமர் தேசியக் கட்சி உட்பட சுமார் 40 கட்சிகள் போட்டியிட்டன.

1993 ஆம் ஆண்டு ஐ. நா ஏற்பாட்டில் நடத்தப்பட்ட தேர்தலின் பின்னர், கம்போடிய அரசினால் நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் இது ஆகும்.

1993 தேர்தலின் பின்னர் இளவரசர் ரணரிட்டும், ஹுன்சென்னும் இணைப்பிரதமர்களாக நியமிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி வரை கூட்டாட்சி இடம் பெற்றது.

கடந்த ஆண்டு ஜூலையில் ரணரிட்டை பதவி நீக்கம் செய்து விட்டு ஹுன்சென் ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்தே கம்போடியாவில் புதிதாக நெருக்கடி உருவாகி ஜப்பானின் சமரசத் திட்டத்தின் கீழ் கடந்த ஞாயிற்றுக் கிழமை தேர்தல் நடத்தப்பட்டது. (இ-8)

# அகதிகள் பிரச்சினை: பூட்டான் கிளப்பும்

பூட்டான், ஜூலை 29
நேபாளத்தில் தங்கியிருக்கும் சுமார் 1 லட்சம் பூட்டான் அகதிகள் பிரச்சினையும் சார்க் மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

அகதிகள் அனைவரும் பூட்டானுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டு மென்று நேபாளம் கோரி வருகிறது.

இந்தியாவுடனான எல்லைப் பிணக்குப் பற்றியும் வேறு பிராந்தியப் பிணக்குகள் பற்றியும் சார்க் உச்சி மாநாட்டின் போது தான் பேச்சு நடத்த இருப்பதாக நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தெரிவித்தார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் மே மாதம் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தியதையடுத்து சீர்குலைந்த நல்லுறவை மீண்டும் வளர்ப்பதற்கு முன்வர வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

நேபாளத்தின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ள பூட்டான் அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியாவின் உதவியை நாடப் போவதாகவும் சொய்ராலா கூறினார்.

நேபாளமும், பூட்டானும் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இதுவரை ஏழு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய போதும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பௌத்தர்கள் பெரும்பான்மையாக வளரும் பூட்டானின் ஆட்சியாளர்கள் இந்துக்களுக்கெதிராக சட்ட விதிகளைக் கொண்டு வந்ததையடுத்து பூட்டானில் உள்ள இந்துக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது.

வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக 1990 ஆம் ஆண்டு முதல் நேபாளம் சென்று தங்கி உள்ள பூட்டான் இந்துக்களின் எண்ணிக்கை சுமார் 1 லட்சத்துக்கும் அதிகம் ஆகும். (இ-8)

# தீவிரவாதியின் தாக்குதல்; ஏமனில் அறுவர் பலி

லண்டன், ஜூலை 29
ஏமனில் தீவிரவாதி ஒருவரினால் அறுவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஏமன் தலைநகருக்கு 225 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கொபீடா என்ற இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

3 ரோமன் கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளையும், 2 இந்தியர்களையும், பிலிப்பீன்ஸ் நாட்டவர் ஒருவரையும் இவர் சுட்டுக்கொன்றார்.

கிறிஸ்தவ மதப் பிரசாரத்தில் இந்த கன்னியாஸ்திரிகள் ஈடுபட்டதால் அவர்களைக் கொன்றதாக அப்துல்லா அல் தசேகி என்ற அந்த தீவிரவாதி ஒப்புக்கொண்டதாக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-8)


இருபாலை கிழக்கு
அருள் மிகு
கந்தசுவாமி கோயில்
(முனி அம்பாள் கோயில்)
மண்டலாபிஷேக பூர்த்தி விழா

காலம்: 29 - 07 - 98 இன்று காலை 10 மணிக்கு 1008 நவோத்திர சஹஸ்ர சங்காபிஷேகம்

நண்பகல்: 12 மணிக்கு அன்னதானம்

மாலை: 4–00 மணிக்கு பூசையும் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும், சண்முகார்ச்சனையும் திருவூஞ்சலும் நடைபெற்று சுவாமி பூந்தண்டிகையில் எழுந்தருளும் காட்சியும் இடம்பெறும்.

கௌரவிப்பு: கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக்குருக்கள் அவர்களையும்,
சிவாச்சாரியார்களையும்
தொண்டர் திருவாளர் செ. செல்லத்துரை அவர்களையும்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

தர்மகர்த்தாக்களும்,
திருப்பணிச் சபையினரும்
இருபாலை கிழக்கு.
(சி/4409)



இதய அஞ்சலி

மில்க்வைற் தொழில் அதிபரும்
சிவதர்ம வள்ளலும் ஆகிய
கலாநிதி க. கனகராசா
சமாதான நீதிவான்

22 — 07 — 1998 இல் சிவபதமெய்தியமை எமது தென்மராட்சிப் பிரிவு மக்களுக்கு மட்டுமல்லாது யாழ். மக்களுக்கே பேரிழப்பாகும். அவர் மக்களுக்கும் நாட்டுக்கும் ஆற்றிய சேவையை நாம் நினைவு கூருவதுடன் அவரது பசுமைப் புரட்சித் திட்டம் வளர நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைத்தால் அவரது கனவு நனவாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

தென்மராட்சி பிரதேச செயலக
நலன்புரிக் கழகம்.
பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
(சி/4414)


உலக அரங்கில்

# தேர்தலில் முறைகேடு நடந்ததாக இளவரசர் ரணரிட் குற்றச்சாட்டு

நொம்பென் ஜூலை 29
கம்போடியாவில் நடந்த பொதுத்தேர்தலில் சில இடங்களில் வாக்களிப்பு முறைகேடாக நடைபெற்றதாக இளவரசர் ரணரிட் குற்றஞ்சாட்டி உள்ளார்.

அத்தகைய இடங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முறைகேடு இடம்பெற்ற இடங்களில் மீண்டும் வாக்களிப்பு நடத்தப்படாவிட்டால் தேர்தல் முடிவைத் தனது கட்சி ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அதே சமயம் தேர்தலும் வாக்கு எண்ணும் வேலைகளும் பெருமளவு சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற்றதாக சர்வதேச அவதானிகள் குழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

இந்தத் தேர்தல் மக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாக இருந்தது என்றும் அவதானிகள் குழு தெரிவித்துள்ளது.

20க்கு கூடுதலான நாடுகளைச் சேர்ந்த 500 அவதானிகள் இந்தத் தேர்தலைக் கண்காணித்தனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நியூசிலாந்து ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தக் குழுவில் இருந்தார்கள். (இ-8)

# கிளின்ரன் விஜயம் இன்னும் பரிசீலனையில்

நியூயோர்க் ஜூலை 29
இந்த ஆண்டின் இறுதியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்ய அதிபர் கிளின்ரன் திட்டமிட்டிருந்த பயணம் இன்னும் பரிசீலனையிலேயே இருப்பதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-8)

# இரட்டையர் சாதனை

இஸ்லாமாபாத் ஜூலை 29
பாகிஸ்தானில் இரட்டையர்கள் ஒரே பரீட்சையில் தோற்றி ஒரே அளவு புள்ளிகளைப் பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

பாகிஸ்தானின் ஹைதராபாத் நகரில்பிறந்த இரட்டையரான ஆய்ஷா குயிக், ரெய்ஷாகுயிக் என்ற சகோதரிகள் உயர்நிலைப் பள்ளி ஆண்டுத்தேர்வில் முதல் நிலையில் தேறி இருவருமே ஒரே புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

# கொசொவோவில் சேர்பியப்படை தாக்குதல்

ருஸ்டினா, ஜூலை 29
கொசொவோவில் அல்பேனிய கிளர்ச்சிக்காரருக்கு எதிராக சேர்பியப் படைகள் பெரும் தாக்குதல் நடத்தி உள்ளன.

தலைநகர் ருஸ்டினாவில் இருந்து இரண்டாவது பெரிய நகரத்திற்குச் செல்லும் பாதை உட்பட பல முக்கிய பாதைகளை சேர்பியப் படைகள் மீண்டும் கைப்பற்றியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை நவரத்தினம்
( இளைப்பாறிய கூட்டுறவுத் திணைக்களத் தலைமை அலுவலகப் பரிசோதகர் )

தோற்றம் 07-09-1926
மறைவு 21-07-1996
திதி: 29-7-98

பாசத்துடனே எமை வளர்த்து
பல்கலையும் பயிற்றுவித்து
பாங்குடனே வாழவைத்த
பரிவு மிக்க அப்பாவே!
காலன் உம்மைக் கவர்ந்து சென்று
காலம் பல பல சென்றிடினும்
உலகம் உள்ளவரை உங்கள்
உண்மை அன்பை நாம் மறவோம்.
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மகன்
மகள்மார், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
ந.முரளிகரன்
மீசாலை கிழக்கு,
மீசாலை.
(57939)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### கைமாறிவிட்டது

துரைச்சாமி பிரதீபன் ஆகிய எனது லுமாலா ஆண்கள் சைக்கிள் (இல: 0901003601) கன்னாதிட்டிச் சந்தியில் வைத்து தவறுதலாக கைமாறி எடுத்துச்செல்லப்பட்டு விட்டது. ஆகவே தவறுதலாக எடுத்துச் சென்றவர் 30/1, நிக்லஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி என்ற முகவரியில் ஒப்படைத்து தங்கள்சைக்கிளைப் பெற்றுக் கொள்ளவும். (57927)

### சேவல் குஞ்சுகள்

பஜிரா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. விலை 25 ரூபா மட்டுமே! மல்லிகாபதி சந்தைமுன் ஒழுங்கை, மானிப்பாய். (57923)

### தவறிவிட்டது

தம்பையா கணேசமூர்த்தி ஆகிய எனது தேசியஅடையாள அட்டை அண்மையில் நாச்சிமார் கோயிலடிக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 16/3, சீனியர் லேன் கலட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். அடையாள அட்டையில் உள்ள விலாசம் சுருவில், ஊர்காவற்றுறை. (57916)

மதியாபரணம் சரத்தர்மரட்ணம் ஆகிய எனதுதேசிய, விசேட அடையாள அட்டைகள் இரண்டும் 26 - 07 - 98 அன்று நல்லூரடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ராகம்ஸ்படடுச்சோலை, 24, நவீனசந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (57913)

மறவன்புலவு தனங்களப்பில் வசிக்கும் இராசதுரை சரஸ்வதியின் அடையாள அட்டையும் வேறும் சில ஆவணங்களும் சாவகச்சேரியிலிருந்து நெல்லியடிக்குச்சென்ற தட்டிவானில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருமதி க. அருளம்பலம், கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் தெரியப்படுத்தவும். (57930)

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய இனங்களை உடைய கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை) 12 மணியிலிருந்து பார்வையிடலாம். (57904)

### வகுப்புகள்

பல்கலைக்கழக உயர்வகுப்புகள் ஏனைய வகுப்புகளுக்கு அடிப்படை ஆங்கிலம், இலக்கியம் ஆகியன கற்பிக்கப்படும். பிரத்தியேக வகுப்புகளுண்டு. 347, கோயில் வீதி, நல்லூர். (57907)

### யாழ்ப்பாணம்

300 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நூல்கள் யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள் 2 நாடகம் எழுதுவது எப்படி? நல்லூரில் கிடைக்குமிடம் ஆனந்தா புத்தக சாலை, பருத்தித்துறை வீதி, நல்லூர். ரூபா 50. (57028)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி உப்புக் கேணிக்கு அருகில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த சிறிய கல்வீடு 8 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு வ செல்வரட்ணம், உப்புக்கேணி வீதி, பெரியமாவடி, சாவகச்சேரி. [சி/4398]

### வீடுவளவு விற்பனைக்கு

சாவகச்சேரி ஆடியம்பிட்டி ஒழுங்கையில் கண்டிவீதி ஓரமாக நான்குபரப்புக் காணியும், இரு வீடுவளவுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம். சட்டத்தரணி, ஸ்ரேசன்றோட், சாவகச்சேரி. (சி/4397)

### திருமண சேவை

எதிர்பார்க்கும் மணமக்களுக்கு எமது சேவையைப் பயன்படுத்துவது விரைவு திருமணங்களுக்கு வழியாகலாம். சேவையை முதன்மையாகக் கொண்ட நம்பகமான அமைப்பு ''சேவை நம்பகம்'', திருமண சேவை, வைமன் வீதி, நல்லூர். (57922)

## இளவரசி வெதுப்பகம்
## பாண் விற்பனை விலையில் மாற்றம்

| | ரூ. | சதம் |
|---|---|---|
| பாண் 350 கிறாம் | 8 | 50 |
| பட்டர் பாண் 300 கிறாம் | 9 | 50 |
| விசேட பாண் 350 கிறாம் | 9 | 50 |

ஆவணித்திங்கள் முதலாம் திகதி முதல் நுகர்வோர் நலம் நாடி எமது பேக்கரி உற்பத்திப் பொருள்கள் 50 சதத்தால் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளப் பெருமக்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி.

உரிமையாளர்
மா. கனகராசா

இளவரசி வெதுப்பகம்,
''ஐடியல்''
மகாத்மா வீதி,
நெல்லியடி.

(சி-4411)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்





**திருமதி**
**மரியம்மா செல்வராசா**

**திருமதி**
**சின்னம்மா யேசுதாசன்**

ஆண்டவன் படைப்பு:

17 - 09 - 1947     15 - 08 - 1942

அழிப்பு: 29 - 07 - 1993

தலைநகரிலிருந்து திரும்பிய நீங்கள் - கொடுங் கடலில்
தலைமறைவாய்ப் போனது மெங்கே?
திசை தெரியாப் பறவைகள் போல்
அலைகின்றோம் உமைத் தேடி
மீளாத் துயில் கொண்ட பாசக் குலவிளக்கே - உமைக்
காணாத்துயர் கொண்டு ஆண்டுகள் ஐந்து ஆயினவே
ஆறாது எம் துயர் மாறாது உம் நினைவு.

ஆத்ம இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர் பொ. செல்வராசா [அம்மான்]
சகோதர சகோதரி குடும்பங்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
தொட்ட மகள்மார், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

முகமாலை, எழுதுமட்டுவாழ்.

(சி/4388)

யா / இணுவில் இந்துக்கல்லூரி

## சேவை நலன் பாராட்டு விழா

எமது கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெறும்

**திருமதி இ. கணபதிப்பிள்ளை**
அதிபர் தரம் II

**செல்வி பொ. கமலாதேவி**
ஆசிரியர் சேவை 2. II

ஆகியோரின் நீண்டகால கல்விச் சேவையினை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய நாம்கௌரவித்து, பாராட்டி மகிழ்வதுடன் அவர்கள் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

நன்றி!

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா / இணுவில் இந்துக்கல்லூரி

(57934)

## STAR கல்வி நிலையம்

சுன்னாகம்

A/L 2000 கணித விஞ்ஞான வகுப்புக்கள்

ஆரம்பம்:- 31 - 07 - 98

| | |
|---|---|
| உயர் கணிதம் | திரு அம்பிகைபாகன் |
| இணைந்த கணிதம் | |
| பௌதிகவியல் | திரு. கருணாநிதீ |
| இரசாயனவியல் | திரு. பரமேஸ்வரன் |
| உயிரியல் | பிரபல ஆசிரியர் |

- நிர்வாகி

(57931)

உ
குருவே துணை
உயர்திரு.

## முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகள்

அவர்களின்

## 13ஆவது வருட குருபூசைத்தினம்

30 - 07 - 98



மேற்படி சுவாமி அவர்களின் குருபூசை நாளை 30-07--98 வியாழக்கிழமை காலை நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினர்: திரு. சி. முருகேசம்பிள்ளை
(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)

சிறப்புச் சொற்பொழிவு:

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
(இளைப்பாறிய அதிபர், இராமநாதன் கல்லூரி)

குருபூசைத் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு ஆதீன முதல்வரால் பரிசில்கள் வழங்கப்படும்.

அனைத்து அடியார்களும் அன்பர்களும் குருபூசைத் தினத்தில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.

(சி/4410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி ஆசிரியர் நியமனம்

இம்மாத மத்தியில் பட்டதாரி ஆசிரிய நியமனம் தொடர்பான பட்டியல் வெளியீடும், நியமனக் கடிதங்கள் வழங்கலும் அரங்கேறின. இதன் பின்னணியில் பல சீர்கேடுகள் இருந்தமையும் வெளிவந்து விட்டது.

★ வலயம் 1 இல் எந்த இசை நடன டிப்ளோமா தாரியின் பெயரும் இடம் பெறவில்லை. அதேநேரம் வலயம் 2இல் 8 பேரின் பெயர் இடம்பெற்றது. நியமனமும் வழங்கப்பட்டு விட்டது.

★ இதுகுறித்து திருகோணமலை கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போது தொண்டர் ஆசிரியராக இருந்த பட்டதாரிகளை தவறுதலாக விட்டுவிட்டோம் எனக் கூறப் பட்டது.

★ இதேவேளை இன்னுமொரு திருமலை அதிகாரியிடம் நியமனம் கிடைக்காத டிப்ளோமா உடைய விண்ணப்பதாரி கேட்டதற்கு, ''உங்களை யார் பட்டதாரி பட்டியலில் சேர்த்தது?'' என்று கேட்டாராம்.

[1976 ஆம் ஆண்டு முதல் டிப்ளோமா பெற்றவர்களுக்கு பட்டமளிப்பு விழாவும் பட்டதாரி சம்பளமும் வழங்கப் படுவது. குறிப்பிடத்தக்கது]

★ இதேஅதிகாரி தமிழ்ப் பத்திரிகை ஒன்றில்(17-7-98இல்) சங்கீத நடன ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரினோம். ஆனால் வந்தவை அனைத்தும் டிப்ளோமா தாரிகளின்விண்ணப்பமே என்றும், இதனால் 125 நியமனங்கள் வழங்க இருந்ததை நிறுத்திவிட்டோம் என்றும் அறிக்கை விட்டிருந்தார்.

★ அவ்வாறெனின் டிப்ளோமா பட்டதாரிகளை ஏன்நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தனர்?

★ இதற்கு ஒருபடி மேலேபோய் செயலாளர் அவர்களோ டிப்ளோமா ஆசிரியர்களை நியமிக்க மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்றும் இது மத்திய அரசிடமே இருக்கின்றது என்றும் அறிக்கை விட்டார்.

★ இது உண்மை எனில் 1994 ஆம் ஆண்டு 7 பேருக்கு மாகாணசபை நியமனம் வழங்கி அவர்கள் இன்னும் சேவையில் உள்ளனரே, அது எப்படி?

★ இப்போது 1998 ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனப் பட்டியலில் வலயம் 2 இல் பெயர் வந்த 8 டிப்ளோமாதாரிகளை நியமனம் செய்வதற்கு மட்டும் மாகாணசபைக்கு அதிகாரம் எப்படிக் கிடைத்தது? யார் கொடுத்தது?

★ 22-7-98 ஆம் திகதிய உதயனில் பிரசுரமான வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரின் அறிக்கை உண்மையை அம்பலப்படுத்துகின்றது.

★ இலங்கையில் இசை நடனத்துறையில் —

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக டிப்ளோமா பட்டம் (4 ஆண்டுகள் கற்கைநெறி) (இசைக் கலைமணி, நாட்டிய கலைமணி,) வட இலங்கைசங்கீத சபையின்தரம் 1 ᴅ ʒ ɔ — தரம் 6, —கலாவித்தகர், —(ஆசிரியர் தரம்)எனஇரண்டு உயர் கற்கைநெறி சான்றிதழ்கள் மட்டுமே இது வரை உள்ளன.

இந்த இரண்டிலும் தேர்ச்சி பெற்றுள்ள (1994 வரை பட்டம்பெற்ற) 18 பேர் வரை இன்று நடுவீதியில் விடப்பட்டுள்ளனர். இதேவேளை உயர்கற்கைநெறிச் சான்றிதழ்களில் ஒன்றையேனும் பெறாத சிலர் இசை, நடன ஆசிரியராகி உள்ளஅதிசயமும் நடந்துள்ளது.

கே. கே. நேசன்

உரும்பிராய்.

# 1996 இல் சித்தியடைந்தோர்

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புவழங்குவதற்காக சில மாதங்களுக்கு முன்னர் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

நேர்முகப் பரீட்சைகளை நடத்திய அதிகாரிகள் அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தனர். ஆனால் உயர் அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை. 1994 வரை பட்டம்பெற்ற சகல பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சிதான்; ஆனால் 1996 இல் வெளியேறிய ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு இந்த நேர்முகப் பரீட்சைப் பெறுபேறு தலையில் மண்ணைவாரி இறைத்து விட்டது.

## வாசகர் திருமுகம்

1994 வரை நியமனம் பெற்றவர்களில் சிலர் அரசாங்க திணைக்களங்களிலே, பயிலுநர்ஆசிரியர்களாகவும், வேலை வாய்ப்புப் பெற்றுக் கொண்டவர்களாவர். அவர்கள் விலகிச் சென்ற வெற்றிடங்களை அரசாங்கம் இப்போதைக்கு நிரப்புமா?

மேலும் அரசாங்கப் பதவிகளில் இருந்து கொண்டே விண்ணப்பித்தவர்கள், 2, 500 ரூபா சம்பளத்தோடு கூடிய ஆசிரியர் நியமனங்களை ஏற்கப்போவதில்லை.

மேலும் வேடிக்கை 1996 இல் வெளியேறிய விஞ்ஞானப் பட்டதாரிகள் அனைவருக்கும், வர்த்தக பட்டதாரிகள் இருவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்து விட்டது. இன்னும் வேடிக்கை என்னவென்றால் ஒருவர், இருவர் என்றுதெட்டம் தெட்டமாக 'பக்ஸ்'மூலம் நியமனம் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. 1996 ஆம் ஆண்டுப் பட்டதாரிகள் உண்மையில்1995 ஆம் ஆண்டாகக் கணக்கில்எடுக்கப்பட வேண்டியவர்கள். அன்றைய சூழ்நிலைகாரணமாக இடம் பெயர்ந்து 1995 இல் பரீட்சை எழுத முடியாது 1996 இல் மீளக்குடியமர்ந்து தமது புத்தகம் கொப்பிகளை இழந்த நிலையிலும் பரீட்சை எழுதி தமது அயரா உழைப்பால் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள்.

அவர்கள் ஆசிரியர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட விடயத்தில் அரச அதிபர், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள் தலையிட்டு நீதிவழங்க வேண்டும் என்பது அடியேனின் கோரிக்கை.

மேலும் 22-7-98 உதயனில் வடக்கு–கிழக்கு ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை பிரசுரித்தமை ஆழ்கடலில் தத்தளித்த ஒருவனுக்குத் தெப்பம் கிடைத்தது போல் இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட பட்டதாரிகளில் பலர் தமது சொந்த வீடுகளை இழந்த அபலைகளாகவும் உள்ளனர்; அவர்கள் படித்துப் பட்டம்பெற எத்தனை வயதாகியுள்ளது. வேலைவாய்ப்பு பெற இன்னும் எத்தனை வயது வரைகாத்திருக்க வேண்டும்? தமிழரின் மனித வளம் இவ்வாறுபாழடிக்கப்படலாமா?

ஆளுநர் காமினி பொன்சேகாவுக்குளங்களில் ஏற்பட்ட மனிதாபிமானம் எங்கள் தமிழ் அதிகாரிகளுக்கு ஏற்படவில்லையே என நினைக்கும் போது நாமும் தமிழரா என்று வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது !

நியமனம் கிடையாத
பட்டதாரி

கோப்பாய்.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

அரியாலை சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவு விழா, பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

(இ-4)

# இந்தியாவிலிருந்து ஜமுனாபாறி ஆடு

ஆடுகளை சினைப்படுத்த இந்தியாவில் இருந்து ''ஜமுனாபாறி'' இனகடாக்களைக் கொள்வனவு செய்ய சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் சங்கம் முன்வந்துள்ளது.

10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகளைக் கொள்வனவு செய்து முதற் தடவையாக கட்டுடைநவாலிப்பகுதிகளில் சினைப்படுத்தும் மையம் ஒன்றை ஆரம்பிக்கவும் முடிவாகி உள்ளது.

உ



## மிருசுவில், படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் - துர்க்காபுரம்
## ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய
# அலங்கார உற்சவம்

ஞானதுர்க்கை அம்பாள் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களைக் காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் ''துர்க்காபுரம்'' என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ துர்க்கை அம்பாளுக்கு இவ்வருடம் 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடத்த எல்லாம்வல்ல அம்பிகை திருவருள் சுந்துள்ளார்.

### அலங்கார உற்சவ விவரம்

அலங்கார உற்சவம் நிகழும் வெகுதானிய வருடம் ஆடிமாதம் 14ஆம் திகதி 30 - 07 - 98 வியாழக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 23 ஆம் திகதி 08 - 08 - 98 சனிக்கிழமை இறுதிநாள் தீர்த்தோற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறும்.

9 ஆம் நாள் விசேடமாக தீக்குளிப்பு வைபவமும் ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின்மேல் ஏறி நின்று துர்க்காதேவியின் வீதி உலாவுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். தினந்தோறும் காலை 10 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூசை திருவிழா என்பனவும், அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலாவும் நடைபெறும்.

### உபயகாரர்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் நாள் | 30-07-98 | வியாழன் | திரு. சந்திரதேவா குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில். |
| 2 ஆம் நாள் | 31-07-98 | வெள்ளி | திரு. தியாகராசா குடும்பம், சங்கத்தானை. |
| 3 ஆம் நாள் | 01-08-98 | சனி | திரு செல்வராசா குடும்பம், டேவிற் வீதி, யாழ்ப்பாணம். |
| 4 ஆம் நாள் | 02-08-98 | ஞாயிறு | திரு. விஜயகுமார் குடும்பம், வதிரி, கரவெட்டி. |
| 5 ஆம் நாள் | 03-08-98 | திங்கள் | திருமதி புஸ்பராணி நவரெத்தினம் குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில். திருமதி புஸ்பலீலா பொன்னம்பலநாதர் குடும்பம, ப. ம திட்டம் மிருசுவில். |
| 6 ஆம் நாள் | 04-08-98 | செவ்வாய் | கலா குடும்பம், மணியம் தோட்டம், யாழ்ப்பாணம். |
| 7 ஆம் நாள் | 05-08-98 | புதன் | திரு முருகேசு குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில். திருமதி சிவபாக்கியம் சுந்தரேசன் குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில் திரு. அருள் குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில். |
| 8 ஆம் நாள் | 06-08-98 | வியாழன் | திரு. வி. தவக்குமார் குடும்பம், அல்லாரை வடக்கு. |
| 9 ஆம் நாள் | 07-08-98 | வெள்ளி | திரு. விக்கினேஸ்வரன் குடும்பம், அல்லாரை. |
| 10 ஆம் நாள் | 08-08-98 | சனி | திரு. செல்லத்துரை குடும்பம், மீசாலை. திரு. மணியம்குடும்பம், மீசாலைவடக்கு. திரு. இராசலிங்கம் சகோதார்கள் ப. ம. திட்டம், மிருசுவில். |

மங்கள இசை:- M. T. தயாபரன், கைதடி

அடியார்கள் இவ்விழாக் காலத்தில் ஆலயத்திற்கு வேண்டிய பால், தயிர், இளநீர், தேங்காயெண்ணெய், பூக்கள், பூமாலை போன்ற பொருள்களை அம்பாளுக்குக் கொடுத்துதவி உற்சவத்தில் அனைவரும் பங்கு கொண்டு எல்லாம் வல்ல ஞானதுர்க்காதேவியின் பாதாரவிந்தங்களைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

''இறை பணியே இன்பப் பணி''

- ஆலய தர்மகர்த்தா
சி. நவரத்தினம்

துர்க்காபுரம் ப. ம. திட்டம்,
மிருசுவில்.

(57909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு 17 கே. வி. வலுவுள்ள ஜெனரேட்டர்

யாழ்ப்பாணம், ஜூலை 29
தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்கி வரும், தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலைக்கு 17 கே. வி. வலுவுடைய ஜெனரேட்டர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேட்டர் மூலம் வைத்தியசாலைக்கு தேவையான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை திருத்தப்படாமலிருக்கும் இந்த வைத்தியசாலையில் கட்டடங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மேற்கொண்டு வருகிறது.

(இ-5-ரி)

# ஓராண்டு நினைவஞ்சலி



தாய் மகிழ்ந்திட
11 — 11 — 1929

தரணியோர் கலங்கிட
09 — 08 — 1997

## அமரர் சிதம்பரம் மாரிமுத்து

(மாவை - கலட்டி)

ஈராறு மாதங்கள் நேற்றாக நிழலாட
வாஞ்சையுடன் பாசத்தில் திளைத்தவனை
நெஞ்சம் நெகிழ்ந்திட ஈர விழிகளால் அர்ச்சித்து
நின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(57864)

### வடக்கு-கிழக்கில் இருந்து

# 30 ஆயிரம் படையினரை அழைக்கும் சூழ்நிலை ஏற்பட்டாலேயே தேர்தல்

## ஜெயரட்ண தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29
வடக்கு — கிழக்கில் பணி புரியும் 30 ஆயிரம் படை வீரர்களையும் எப்போது தென்பகுதிக்கு அழைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றதோ அப்போது தான் இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியும் என்பதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் ஜி. எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலன்னறுவையில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவ்வாறு 30 ஆயிரம்படை வீரர்களும் தென்பகுதிக்கு அழைத்து வரப்படாமல் ஒரு மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு வெற்றி பெற்றால் அந்தத் தேர்தல் முறைகேடான ஒரு தேர்தல் என்று கூற ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(இ-10-9)

## துரைராசா நினைவு புலமைபரிசில்

வலி.தென்மேற்கு, ஜூலை29
பேராசிரியர் துரைராஜா நினைவாக தங்கப்பதக்கம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை இந்த ஆண்டில் பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்து வகுப்பு இரண்டில் சித்தியடைந்தவர்களிடமிருந்து யாழ். பல்கலைக்கழகம் கோரியுள்ளது.

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவில் துரைராஜா நினைவாக சகல பீடங்களுக்குமாக ஒரு தங்கப்பதக்கமும், ஒவ்வொரு பீடத்துக்கும்ஒரு தங்கப்பதக்கமும் வழங்கப்படும்.

(இ-185)

## ஊர்காவற்றுறையில் வயிற்றோட்ட நோய்

நெடுந்திவு, ஜூலை29
ஊர்காவற்றுறைப் பகுதியில் வயிற்றோட்ட நோய் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீரைக் கொதிக்கவைத்து ஆறியபின் குடிக்குமாறும்—
கண்ட கண்ட இடங்களில் உணவு வகைகளை வாங்கிச் சாப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும்—
சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கையாளுமாறும்—
ஊர்காவற்றுறை சுகாதாரப் பகுதிப் பொறுப்பதிகாரி வீ. கே. வருணநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ-111)

## 1லட்சத்துக்கு மேலானோர் உயர் வகுப்புக்குத் தகுதி

கொழும்பு, ஜூலை 29
1997 டிசெம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றியோரில் 32. 78 சதவீதமானோர் உயர்தர வகுப்புக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

இவ்வாறு தகுதி பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 5 ஆயிரத்து 969 ஆகும்.

இப்பரீட்சைக்குத்தோற்றியோரில் 23 ஆயிரத்து 678 பேர் தோற்றிய 8 பாடங்களிலும் சித்தியடையவில்லை. ஆயிரத்து 204 பேர் 8 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

இப் பரீட்சையில் தோற்றியோரில் 21 ஆயிரத்து 538 பேர் ஒரு பாடத்தில் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர்.

(இ-10)

## அன்னதானம்

நெடுந்தீவு, ஜூலை 29
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவல் சபை ஆலயத்திற்கு வரும் அடியார்களின் வசதிக்காக தினமும் கல்யாணமண்டபத்தில் அன்னதானம் வழங்கவும்—

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அமுதசுரபி அன்னதான சபை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவும்—நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ-111)

## கோப்பாய் ஆஸ்பத்திரி அவல நிலை நீடிப்பு

உரும்பிராய், ஜூலை 29
கோப்பாய் அரசினர் வைத்தியசாலை ஒரு மருந்தகம் போன்று இயங்கி வருகிறது.

நோயாளிகள் தங்கி சிகிச்சைபெறும் வார்ட்டுகள் இன்னும் இயங்கவில்லை. ஓர் உதவி வைத்திய அதிகாரியின் பொறுப்பிலேயே வைத்தியசாலை இயங்குகிறது.

1995ஆம் ஆண்டுக்கு முன்பு இங்கு பிரசவ விடுதியும் இயங்கியது. இப்போது அதுவும் செயற்படவில்லை. இப்பகுதியைச் சேர்ந்த பிரசவத் தாய்மார்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

(இ-154)

## இசைப்பேருரை

நல்லூர் உற்சவ காலத்தில் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நல்லூர் சைவ மகா சபையினால் வருடா வருடம் நடத்திவரும் தெய்வீக அருள் தொடர் இசைப்பேருரை இம் முறையும் மஞ்சத்திருவிழா முதல் நடைபெறும்.

கான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா கம்பராமாயணம் பற்றி பேருரை நிகழ்த்துவார்.

(இ-4)

# வடபிராந்திய போக்குவரத்துச் சபை

## யாழ். சாலை, பருத்தித்துறை சாலை பேருந்து சாரதி, நடத்துனர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோருதல்

1. 

| தகைமைகள் | | சாரதி | நடத்துனர் |
|---|---|---|---|
| அ. கல்வித்தகைமை | — | ஆகக் குறைந்தது 8ஆம் வகுப்பு சித்தியடைந்து இருத்தல் வேண்டும். | க.பொ.த, (சாதாரணம்) கணிதம், தமிழ் பாஷைஉட்பட ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இரு அமர்வுகளுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். |
| ஆ. நிறை | — | 52 கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும். | 45 கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| இ. உயரம் | — | 5 அடி 4 அங்குலத்துக்கு மேல். | 5 அடிக்கு மேல். |
| ஈ. வயது | — | 22 தொடக்கம் 45 வரை (1998 - 07 - 31 ஆம் திகதியன்று) | 20 தொடக்கம் 40 வரை; (1998 - 07 - 31 ஆம் திகதியன்று) |

2. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
3. சாரதிகள், மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சகல மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்கான சாரத்திய அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தலுடன் அவ்வாறான வாகனங்கள் செலுத்துவதில் இரண்டு (2) வருடங்களுக்கு மேலான அனுபவம் இருத்தல் வேண்டும்.
4. சாரதிகள் வ.பி.போ. சபையின் சாரதி பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரர்கள் யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இதை உறுதிப்படுத்தும் பிரதேச செயலரின் மேலொப்பம் இடப்பட்ட கிராமசேவையாளரின் கடிதம் இணைக்கவேண்டும்.
6. நேர்முகப் பரீட்சையின் போது பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.
7. நடத்துனர்கள் தெரிவு தொடர்பான நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் ஓர் எழுத்துப் பரீட்சை நடைபெறும்.
8. விண்ணப்பம் முடிவிற்கான திகதி 1998-08-15
9. விண்ணப்பங்கள் யாவும் "ஆளணி முகாமையாளர் வ. பி. போ. சபை, பலாலி வீதி, கோண்டாவில்" என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்புதல் வேண்டும்.
10. விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிடவும்.

வ. பி. போ. சபையினால் வழங்கும் விண்ணப்பப் படிவங்களை யாழ். மத்திய பேருந்த நிலையத்திலும், பருத்தித்துறைச் சாலையிலும், (ரூபா 3/-) மூன்று செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்களைத் தவிர வேறு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 1998-08-15ஆந் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பொதுமுகாமையாளர்
வடபிராந்திய போக்குவரத்துச் சபை.

98-07-27

(ஐ/2[illegible])

# கண்ணீர் அஞ்சலி

## சண்முகம் கார்த்திகேசு

எமது கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர்

கலாநிதி கா. குகபாலன்

அவர்களின் அன்புத் தந்தையாரின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ யாழ். இந்து மகளிர்கல்லூரி.

(57926)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவின் கடமை

தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள், கெடுபிடிகளுக்கு மத்தியில் 'சார்க்' மாநாடு இன்று கொழும்பில் நடைபெறுகின்றது.

தெற்காசிய நாடுகளின் பொருளாதார விவகாரங்கள் குறித்தே இந்த மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலத்தின் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கை வருவது இந்த 'சார்க்' மாநாட்டில் முக்கியமானதொரு அம்சமாகும்.

பிரதமர் பதவியை ஏற்ற பின்னர் வாஜ்பாய் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயமும் இதுவே.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையுடன் அது செய்து கொண்ட பல்வேறு துறைகள் தொடர்பான ஒப்பந்தங்களில், 1987 ஜூலையில் ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக செய்து கொண்ட உடன்படிக்கையே மிக முக்கியமானது.

அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், ஈழத் தமிழரின் இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை தார்மீக ரீதியாக இந்தியா ஏற்றுக் கொண்டது. இந்தியா அந்தப் பொறுப்பை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டதன் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் தவிர்ந்த — ஈழத் தமிழர்களுக்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடிய — ஏனைய தமிழ் இயக்கங்கள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து அவற்றைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்ப இணங்கின; ஜனநாயக வழிக்குத் திரும்பின.

எனவே இலங்கை வரும் இந்தியத் தலைவருக்கு தனது நாட்டுக்கும் இலங்கைக்கும் சம்பந்தமான ஓர் ஒப்பந்தத்தின் நிலைமைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய கடப்பாடு உண்டு.

ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை, இந்தியா தான் ஏற்றுக் கொண்ட தார்மீகப் பொறுப்பை இதயசுத்தியுடன் மேற்கொண்டு நிறைவேற்றாத நிலையில் நழுவிப் பின்வாங்கி ஒளித்துக் கொண்டது. ஈழத்தமிழர் மத்தியில் இருந்து எழுந்த எதிர்ப்புக் காரணமாகவே நாம் பின் வாங்கினோம் என்று இந்தியா இன்று கூறுவது ஏற்புடையதானால் இதே எதிர்ப்பு 1987 செப்டெம்பரிலேயே வெளிப்படுத்தப்பட்டு விட்டது; அப்போதே இந்தியா பின்வாங்கியிருக்கலாம்.

இப்போது இலங்கைவரும் இந்தியப் பிரதமர் — தனது நாடு ஈழத்தமிழர் தொடர்பாக எழுத்தமூல (உடன்படிக்கை) மூலம் ஏற்றுக் கொண்ட தார்மீகப் பொறுப்பை உறுதிப்படுத்தி, இலங்கை அரசுக்கு கண்டிப்புடன் எடுத்துக் கூறி, விளக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர் நலனை உதாசீனப்படுத்தும் விதத்தில் அவர் நடந்து கொள்வாராயின், ஈழத்தமிழர் நலனை நசுக்கும் சிங்கள ஏகாதிபத்தியப் போக்கை உஷார் படுத்துவதாகவே அது அமைந்து விடும்.

# 149 சமுர்த்தி ஊழியர்களுக்கு இன்னும் சம்பளம் இல்லை

வலி. தென்மேற்கு, ஜூலை 29

குடாநாட்டில் உள்ள பதினான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றி வரும் 149 சமுர்த்தி பணியாளர்கள் தமது சம்பள நாளை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.

ஏழாவது மாதமாக சம்பளமற்ற நிலையிலும் —

உரிய நியமனக்கடிதங்கள் கிடைக்காத நிலையிலும் —

தமது கடமைகளை இவர்கள் ஆற்றிவருகின்றனர்.

நியமனங்களை வழங்கிய அரசியல் கட்சிகளும், யாழ். அரச அதிபரும் சமுர்த்தி பணியாளர்களின் சம்பளம் தொடர்பாக அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் பேரை சமூர்த்திப் பணிகளில் நிரந்தரமாக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இன்றும் நிரந்தர நியமனமோ சம்பளமோ வழங்கப்படவில்லை.

(இ-185)

## மின் விநியோகம் சீராக இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

அரியாலை மத்தி மற்றும் தெற்குப் பகுதிகளுக்கான மின் விநியோகம் கடந்த ஒரு வாரமாக சீராக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும், இப் பகுதியில் வாழும் பல்கலைக்கழக மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## தமிழ் வர்த்தகரின் வீட்டில் வெளிநாட்டு நோட்டுக்கள்

கொழும்பு, ஜூலை 29

கொழும்பு பழைய ஜோன் வீதியில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலிருந்து 74 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நோட்டுக்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நோட்டுக்களில் அமெரிக்க டொலர்கள், ஆஸ்திரேலிய டொலர்கள், இத்தாலிய லீராக்கள், சவுதி றியால்கள், ஜப்பானிய ஜென்கள், டென்மார்க் குறோனாக்கள், ஓமான் றியால்கள் மற்றும் பிரான்ஸ் பிறாங்குகள் அடங்கியிருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(இ-10)

## உயர்தர வகுப்பு நடத்த அனுமதி

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்துக்கு ஜீ. சீ. ஈ. (உயர் தரம்) கலைப்பிரிவை நடத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இந்த உயர்தர வகுப்பை நடத்துவதற்காக நீண்டகாலமாகப் பாடசாலைச் சமூகத்தினர் செயற்பட்டு வந்தனர்.

தூர இடங்களுக்குச்சென்று உயர் கல்வியைத் தொடர வசதி இல்லாத மாணவர்களுக்கு இப் பாடசாலையில் உயர்தர வகுப்பிற்கான அனுமதி கிடைத்தமை வரப்பிரசாதமாக உள்ளதென அப் பகுதிப் பெற்றோர்களும், நலன் விரும்பிகளும் தெரிவித்தனர்.

(இ)

## தொலைபேசி வசதி இல்லை

உரும்பிராய், ஜூலை 29

உரும்பிராய் தபாலகத்துக்குத் தொலைபேசி வசதி இன்னும் கிடைக்கவில்லை.

(இ-154)

## செஞ்சிலுவைக் கப்பலில் மருந்து, தளபாடம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு மருந்து வகைகள் மற்றும் தளபாடங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை காங்கேசன்துறைக்கு வரும் கப்பலில் இவை எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-5-ரி)

## உதவித்திட்டம் குறித்து விளக்கமளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். குடாநாட்டில் யுனிசெவ் மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் உதவித்திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்கள் பற்றி விளக்கமளிக்கும் கூட்டங்கள் நாளை வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறும் —

யுனிசெவ் அமைப்பின் செயல் திட்டங்கள் பற்றிய கூட்டம் நாளை காலை 10 மணிக்கும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் செயல்திட்டங்கள் பற்றிய கூட்டம் பி. ப 2.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

இந்தக் கூட்டங்களுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேசசெயலர்களும், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

(இ-7)

## பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சைக்காக அத்தியார் இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு யாழ். வலயம் 2 இன் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா கேட்டுள்ளார்.

(இ-8)

## ஆடுகள் களவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மானிப்பாய் உடுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 13 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று யமுனா பாறி இன ஆடுகள் கடந்த சனிக்கிழமை களவாடப்பட்டன.

ஆடுகள் சத்தமிடாது இருப்பதற்காக திருடர்களால் ஈரச் சாக்குகள் பயன்படுத்தப் பட்டன என்று உரிமையாளர் தெரிவித்தார்.

(இ-ரி-90)

## திறப்புவிழா

காரைநகர் பயிரிக்கூடல் இந்து மாமன்றத்தின் சிறுவர் பூங்கா திறப்பு விழா எதிர் வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

மன்றத் தலைவர் ஆ. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாக ஊர்காகற்றுறை உதவி அரசாங்க அதிபர் கலந்து கொள்வார்.

(இ-135)

## நல்லூரில் ப.நோ.கூ. சங்க விற்பனை நிலையம்

யாழ்: பலநோக்கு கூட்டுறவு சங்கம் நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு விசேட புடைவை விற்பனை நிலையம் ஒன்றை திறக்கவுள்ளது.

நல்லூர் பருத்தித்துறை வீதியில் உள்ள சங்கத்தின் 12 ஆம் இலக்க கிளையில் இந்த புடைவை விற்பனை நிலையம் அமையும்.

(இ-17)

## உரை அரங்கு

நல்லூர் உற்சவ காலத்தை யொட்டி யாழ்ப்பாணம் சேக்கிழார் கழகம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிற்பகல் 2.30 மணி முதல் கழக இளைஞர்களின் உரையரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

இன்று பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் பா. பாலசோபி "திருஞான சம்பந்தர்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

நேற்று யாழ். இந்துக்கல்லூரி மாணவன் கு. செந்தூரன் 'மனுநீதி கண்ட சோழன்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

(இ 8)

## விளையாட்டு நிகழ்வுகள்

சுதுமலை - வடக்கு, தமிழ்க்கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே. தம்பிராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

(இ-90)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

### நற்பதம் நல்கும் நல்லூர் முருகன்

அற்புதம் நிறைந்த சோதி அழகதே வடிவ மாகி
கற்பனைக் கெட்டாத் தெய்வக் கைவேலின் கவசத் தோடு
பொற்புறு இருவர் மாதர் பொலிவுடன் மயிலில் ஏறி
நற்பதம் நல்கும் நல்லூர் முருகனேபோற்றி போற்றி!

- முருகனடியான்



### அஞ்சுவமோ நாங்கள்!

நல்லூரான் திருவடியை
நான நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி — கிளியே
இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி —கிளியே
நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி — கிளியே
கவலை யெல்லாம் போகுமடி

எத்தொழிலைச் செய்தாலென்ன
ஏதவத்தைப் பட்டாலென்ன
கர்த்தன் திருவடிகள் — கிளியே
காவல் அறிந்திடடி

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி — கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி.

— யோகர் சுவாமிகள்

### உதய வாக்கு

சில வேளைகளில் வாய் திறந்து பேசுவதைவிடப் பேசாமலிருப்பதே மிக்க பயனை அளிப்பதாகும்.

டாக்டர்
எஸ். ராதாகிருஷ்ணன்

### நாளை

ஆடி -14

வியாழக்கிழமை

திதி: ஸப்தமி

பின்னிரவு: 3.43 வரை.

நட்சத்திரம்: சித்திரை

பின்னிரவு: 2.16 வரை.

சுபநேரம்: 7.33 - 9.03

ராகுகாலம்: 1.33-3.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

## அன்பான வேண்டுகோள்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் அமைந்துள்ள சகல வர்த்தக நிலையங்களும் ஊழியர்களின் நலன் கருதி சனி 2 மணியின் பின்பும், ஞாயிறு முழு நாளும் மற்றும் அரசாங்க, வர்த்தக விடுமுறைத் தினங்களிலும் விடுமுறை வழங்கி கடைகளைப் பூட்டுமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு தங்களது வர்த்தகர் சங்கங்களது உதவியை நாடவும்.

முக்கிய குறிப்பு;-

அங்கத்துவம் பெறாத நிறுவனங்கள் தயவு செய்து தங்கள் பகுதிச் சங்கங்களில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

இல. 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/4413)



# கண்ணீர் அஞ்சலி

திருமதி
**சதயலட்சுமி மனோரஞ்சன்**

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி ம. சுரேகாவின்

அன்புத்தாயார் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ கொக்குவில் கலைமகள் வித்தியாலயம்.

(55463)


# ஓய்வூதியர் சங்க கலந்துரையாடல்

வட இலங்கை வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வர்த்தக வங்கிக்கு சமீபமாக அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் கூட்டுறவாளர்கள், வங்கி வாடிக்கையாளர்கள், வங்கியின் முன்னாள் பணியாளர்கள், தொழிற்சங்க வாதிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வட இலங்கை வங்கி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வங்கிச்சேவை குறித்தும்— வாடிக்கையாளர்களும் ஏனையோரும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் — இந்த கலந்துரையாடலின் போது ஆராயப்படும் என்றும் — கலந்துரையாடலின் பின்னர் வட இலங்கைவங்கி வாடிக்கையாளர்கள் சங்கம் அமைக்கப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.


MEDI QUICK
**மெடிக் குயிக்**
ஆய்வு கூடம்

தினசரி காலை
7. 30 — 8. 30 வரை
சுன்னாகம்
பெற்றோல் செற்றுக்கு
அருகில் இயங்கும்

அ. சுந்தரங்கம்
ஆய்வுகூடப் பரிசோதகர்

(55462)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்த சுவாமி கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு 1008 நவோத்திர சங்காபிஷேகத்துடன் நிறைவுறும்.

நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும், மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், அதனைத் தொடர்ந்து சண்முகர்ச்சனையும் நடைபெற்று சுவாமி பூந்தண்டிகையில் உலாவரும் காட்சியும் இடம் பெறும். (இ)

★ ★ ★

மறவன்புலோ கலையாபாரணன் கோட்டை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத வள்ளிவேலவர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 7ஆம் திகதி தேர் உற்சவ்மும், மறுநாள் 8ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 9 ஆம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும். (இ135)

★ ★ ★

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (இ-ரி)

★ ★ ★

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகோற்சவம் இன்று புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கும் இரதோற்சவமும், மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-8)

★ ★ ★

அனலைதீவு ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும் திருவிழாக் காலத்தில் தினமும் இரவு 8 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் கான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா ''மகாபாரதம்'' பற்றி தொடர் சொற்பொழிவாற்றுவார். (இ-4)

# தொலைபேசி

யாழ்ப்பாணம், ஜூலை 29

வண்ணார்பண்ணை அஞ்சல் அலுவலகத்தில் பொது மக்கள் நலன் கருதி தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# சைவநெறி பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சைவ நெறித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்குரிய சான்றிதழ்கள், பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சான்றிதழ் கிடைக்கப் பெறாதோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (ஐ)

# 'புட்வால்வ்' திருட்டு

உரும்பிராய், ஜூலை 29

நீரிறைக்கும் இயந்திரங்களுக்குரிய 'புட்வால்வ்' கள் இரவு நேரத்தில் திருட்டுப் போகின்றன. நீர்வேலிப் பகுதியில் உள்ள தோட்டங்களில் இத்துணிகரத் திருட்டு அடிக்கடி இடம்பெறுகிறது.

விவசாயிகள் நீரிறைத்து முடிந்த பின்பு நீரிறைக்கும் இயந்திரங்களுக்குரிய பைப்புகளை அங்கேயே கிணறுகளுக்குள் விட்டுச் செல்வது வழக்கம்.

இதனை அவதானிக்கும் திருடர்கள் இரவு நேரத்தில் பைப்புகளை வெளியில் எடுத்து புட்வால்வ்களை அறுத்தெடுத்துச் சென்று விடுகின்றனர். (இ-154)


# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் நிர்மாணத்திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினால் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு எம்-9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாண நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

### கேள்வி வைப்புப் பணம்

| வேலை விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. 10' உள் விட்டமுள்ள கிணறு நிர்மாணித்தல் கால்நடை உற்பத்தி அலுவலகம், வேலணை. | 100/- | 1,300/- |
| 2. முட்கம்பி வேலியும், கேற்றும் அமைத்தல் கால்நடை உற்பத்தித் திணைக்களம், அச்சுவேலி. | 250/- | 6,400/- |
| 3. புனரமைப்பும் திருத்த வேலையும் செய்தல் கால்நடை உற்பத்தி அலுவலகம், சாவகச்சேரி. | 100/- | 1,300/- |
| 4. புனரமைப்பும் திருத்த வேலையும் செய்தல் கால்நடை உற்பத்தி அலுவலகம் பருத்தித்துறை. | 250/- | 2,660/- |
| 5. புனரமைப்பும் திருத்த வேலையும் செய்தல் செயற்கை முறை சினப்படுத்தல் நிலையம், திருநெல்வேலி. | 250/- | 2,500/- |

கேள்விப் பத்திரங்களை 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி முற்பகல் 4. 45 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி,
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.

(சி/4412)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# பொதுப்பட்டமளிப்பு 1998-10-04

கலாநிதி / முதுமாணி/ பட்டப்பின் டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / டிப்ளோமாக்கள் ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1998-10-04 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1998-08-31க்கு முன்னர் பட்டம் பெறுவதற்கான தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1) கலாநிதித் தேர்வு
2) முது கலைமாணித் தேர்வு
3) முதுதத்துவமாணித் தேர்வு
4) கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் தேர்வு – 1995
5) வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு
6) வணிகமாணித் தேர்வு 1995
7) தொழில் நிர்வாக மாணித் தேர்வு– 1995
8) விஞ்ஞானமாணித் தேர்வு (பொது / சிறப்பு) – 1995
9) கலைமாணித் தேர்வு (பொது/சிறப்பு)-1995
10) இசை/ பரதநாட்டியக் கலைமணி (டிப்ளோமா) தேர்வு-1995
11) சித்த வைத்திய, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு – 1995
12) விவசாய விஞ்ஞான மாணி – 1995
13) முது விஞ்ஞான மாணித் தேர்வு

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகோட் படிவங்களையும், மற்றும் விவரங்களையும் முத்திரை ஒட்டிய 23 × 10 சென்றி மீற்றர் அளவுடைய, சுய விலாசமிடப்பட்ட கடித உறையை உதவிப் பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்

1998-07-22;

(சி/4404)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 44 அகதிகள் பலியான

# இராமேஸ்வரம் சம்பவம் ஈழத்தமிழர் நிலைமையை வெளிப்படுத்துகிறது

## ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

"சாதாரண மக்களின் உயிர் உடைமைக்கு பாதுகாப்பு இருப்பதாக அரசு என்னதான் கூறினாலும் நெஞ்சை நெருடும் மரணங்கள் சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கின்றது என்ற கேள்வியையே எழுப்புகின்றன"

இராமேஸ்வரத்தில் படகு கவிழ்ந்து 44 அகதிகள் பலியான சம்பவம் தொடர்பாக தாம் வெளியிட்ட அறிக்கையில் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் க. பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யுத்தக் கொடுமைகளுக்கு மத்தியில் சொல்லொணா வேதனைகளை அனுபவித்து சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து மரங்களின் கீழும் அடர்காடுகளிலும் வானமே கூரையாக பட்டினி, மரணம் என்பவற்றை எதிர்நோக்கி நிற்கும் மக்கள் உயிரைப்பணயம் வைத்து இந்தியாவிற்கு அகதிகளாகச்செல்கிறார்கள். இது இன்று நாளாந்தம் நடைபெறும் நிகழ்ச்சி.

அரச கட்டுப்பாட்டிலில்லாத நாச்சிக்குடாப் பகுதியிலிருந்தும் கட்டுப்பாட்டில் உள்ள பேசாலைப் பகுதியிலிருந்தும் உயிரைப் பணயம் வைத்து இந்தப் பயணம் நடைபெறுகிறது. இதற்காக தலைக்கு 5000 ஆயிரம் அறவிடப்படுகிறது. பணத்தாசையால் வள்ளக்காரர்கள் 50 பேர், 60 பேர்என சிறிய வள்ளங்களில் ஆட்களை ஏற்றுகிறார்கள். இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும் மக்கள் ஏன் பயணம் செய்கிறார்கள்? அவர்கள் எங்காவதொரு இடத்தில் நாம் நிம்மதியாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு பயணம் செய்கிறார்கள்.

இவ்வாறு சென்றவர்களில் 44 அகதி மக்கள் வங்கக் கடலில் இந்தியக் கடல் பிரதேசத்தில் மரணத்தைத் தழுவியுள்ளது பாரிய மன அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இதில் 15 பேர் பெண்கள், 5 பேர்குழந்தைகள். இது இன்று நேற்றல்ல. கடந்த 15 வருடங்களில் இத்தகைய பெருந்துயரச் செய்திகள் இடையிடை வந்து கொண்டிருக்கின்றன.

இந்தத் துயரமான மரணத்தைத் தழுவிய மக்களுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது—என்றுள்ளது.

# கோப்பாய் - கைதடி பாதை அரச ஊழியருக்கு மட்டுமே

யாழ்ப்பாணம், ஜூலை 29

கோப்பாய் — கைதடிப் பாலத்தால் அரச ஊழியர்கள் மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுளளது. அதுவும் சைக்கிள்களிலேயே அவர்கள் செல்லமுடியும்.

அரச ஊழியர்கள் தவிர்ந்த ஏனையோர் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள என்று 513 ஆவது படையணி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய்—கைதடிபாலம் திருத்தம் செய்யப்பட்டு வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதாக 18 – 7 – 98 சஞ்சீவி பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானது என்று படையினர் தரப்பால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

# மீள் நியமனம் கிடைத்தும் கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

சுகாதாரத் திணைக்களத்தில் மீள் நியமனம் வழங்கப்பட்ட பலருக்கு அவர்களுக்குரிய கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை.

மீள் நியமனத்துக்கு விண்ணப்பித்த யாழ்ப்பாண விண்ணப்ப தாரர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான அனுமதி சுகாதார அமைச்சிலிருந்து கிடைக்காத காரணத்தினாலே கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் — அனுமதி கிடைத்ததும் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் — சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுகாதாரப்பகுதியில் மருந்து கலவையாளர், மருத்துவ தாதிகள், அப்போதிக்கரி உட்பட பல பதவிகளுக்கு யாழ்ப்பாணத்தில் மீள் நியமனம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5-ரீ)

## நல்லைக்குமரன் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவினால் நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் 'நல்லைக்குமரன்' மலர் வெளியீட்டுவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (இ-7)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 5.30 மணி முதல் 7.00 மணி வரை எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசை நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (இ-17)

## இளம்பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வீட்டின் 'பிளாட்' இடிந்து தலையில் விழுந்ததில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிருஷ்ணபிள்ளை விஷ்ணி (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15)

## முதுதத்துவமாணி பட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறையைச் சேர்ந்த இரு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் முதுதத்துவ மாணிப்பட்டம் பெற்றுள்ளனர்.

திருமதி ரதிராணியோகேந்திரராஜா, இளையதம்பி ரட்ணம் ஆகிய இருவருமே முதுதத்துவ மாணிப்பட்டத்தை பெற்றுள்ளனர்.

(உ-7)

## வேள்வியில் பலி

சாவகச்சேரி, ஜூலை 29

தென்மராட்சியில் கைதடி வடக்கு, குமரநகர் அண்ணமார் கோயிலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வருடாந்த பொங்கல் வேள்வி உற்சவத்தின் போது சுமார் 50 ஆட்டுக் கடாக்களும் 30 வரையான கோழிகளும் பலியிடப்பட்டன.

(உ-31)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறை 3 ஆம் வருட மாணவர்களால் நடத்தப்படவிருந்த இறுதியாண்டு மாணவர்களுக்கான பிரிவுபசார வைபவம் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று கவின்கலை மன்றம் அறிவித்துள்ளது.

(உ-3)

## நெடுந்தீவில் விருந்தினர் விடுதி

நெடுந்தீவு, ஜூலை 29

நெடுந்தீவு பிரதேசசபை விருந்தினர் விடுதி ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இதற்கென ரூபா மூன்று லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மனோகரன் புதிய கட்டடத்துக்கான அடிக் கல்லை நடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரதேச சபை தொடக்க விழாவின் போது நட்டார். (இ-111)


## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)

சுன்னாகம்

## அறிவித்தல்

யாழ். வைத்தியசாலை கூட்டுறவு நல விருத்திச் சங்கத்தின் தேநீர் சிற்றுண்டிச் சாலை 1 - 5 - 98 இல் இருந்து சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது என்பதனை அறியத் தருகின்றோம். இந் நிலையத்தில் பாவனையாளர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படின் எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். (சி/4416)

## நல்லூர் மஹோற்சவம் 1998 வீதித்தடை

மேற்படி உற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் பாதைகள், தெருக்கள் 28-07-98-ம் திகதி அதிகாலை 12-00 மணியிலிருந்து 23-08-98-ம் திகதி நள்ளிரவு 12-00 மணிவரைக்கும் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும்.

இவ்வீதித்தடை நல்லூர் தேவஸ்தானத்தினரின் ஆலோசனையுடன் அமுல்படுத்தப்படுகிறது.

★ அரசடிச் சந்திக்கும் 2-ம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்,

★ பிராமணக்கட்டுக் குளச்சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் அப்பாகம்,

★ செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் அப்பாகம்,

★ பஸ்வண்டிகள், மினிபஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச்சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாக நல்லூர்குறுக்கு வீதியூடாகவும் கச்சேரி நல்லூர் வீதிச்சந்தி வழியாகவும் முத்திரைச் சந்தைச்சந்தி யூடாகச் செல்லல்,

★ 2-ம் கட்டைக் குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(இ/4420)

## A/L
### வினாத்தாள்கள்

★ விலங்கியல்
★ தாவரவியல்
★ பிரயோக கணிதம்
★ எண் கணிதம்
★ அளவையியல்
★ புள்ளிவிபரவியல்
★ தமிழ்
★ வணிகக் கல்வி

வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்

BOND
யாழ். நகர்.
(57943)

உ
விராட் விஸ்வப்பிரம்மனே

## வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபரும், 150 க்கு மேற்பட்ட சித்திரத்தேர்களை உருவாக்கிய பிரபல சிற்பரத சுரபியும், சிற்பக்கலா மேதையுமான

### ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்கள் இலங்கை கலாசார அலுவலகள் திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டு

"கலாபூஷணம்"

விருது பெற்றமையைப் பாராட்டுவதோடு; அன்னார் நீண்ட ஆயுளுடன் கலைத்தொண்டாற்ற வேண்டுமென இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வே. சிதம்பரநாதன். செ. முத்துக்குமார்.
மாவிட்டபுரம், இ. அன்பழகன்.
தற்போது நீர்வேலி வடக்கு. (57942)

## வாழ்த்துகின்றோம்

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்

" கலாபூஷணம் "

விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட திருநெல்வேலி காளிகோயிலடி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் சிற்பகலா மேதை, சிற்பசுரபி விஸ்வப்பிரம்ம ஸ்ரீ

### ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்களின் கலைத் தொண்டு மேலோங்க வாழ்த்துகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,
திருநெல்வேலி,

(57941)

## WANTED

**Temporary Receptionist/ Clerk**

Must be able to speak understand and write English clearly. Duties include answering the phone, taking and relaying messages introducing visitors. Attractive salary. offered send CV before 5th August.

To.
Adv. No. 766,
C/o. Uthayan.

(57936)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்- யாழ். மத்திய கல்லூரி நிறுவுனர்-தினசுழல் கேடயத்துக்கான 6 பேர் கொண்ட 6 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டங்களில்- கே. ஸி. ஸி. ஸி. 'பி' அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணியும்-, கே. ஸி. ஸி. ஸி. 'ஏ' அணியை எதிர்த்து வர்த்தக வங்கி அணியும் மோதவுள்ளன. (உ-3)

# தீர்வுக்கு அழுத்தம் தருமாறு வாஜ்பாய்க்கு வலியுறுத்தல்!

### யாழ். மாநகர சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு பாரதப் பிரதமர் வாஜ்பாய் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை வரும் பிரதமர் வாஜ்பாயைக் கோருவது என்ற பிரேரணைக்கு யாழ். மாநகரசபையில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஈ. பி. டி. பி., புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியன இணைந்து இந்தப் பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளன.

ஈ. பி. டி. பியின் பிரதிநிதி கே. வி. குகேந்திரன் (ஜெகன்), புளொட் பிரதிநிதி செ. கிருபைராஜா, ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதி த. சுபத்திரன் (றொபேர்ட்) ஆகிய மாநகர சபை உறுப்பினர்கள் இந்த முன்னறிவித்தலில் கையொப்பம் இட்டுள்ளனர்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா இதுவரை அக்கறை செலுத்திவந்துள்ளது. இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தொடர்பான கடமையும், பொறுப்பும் இந்தியாவுக்கு உள்ளது என்பதையும் வலியுறுத்துகின்றோம் என அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-3]

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆசிரிய தொலைக் கல்வி நிலையங்களில் பயிற்சி பெற்று பரீட்சைகளுக்குத் தோற்றிய ஆசிரியர்களில் இதுவரை பரீட்சை முடிவுகள் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். இந்துக் கல்லூரி தொலைக் கல்வி நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்துவிடம் விவரத்தினை உடன் சமர்ப்பிக்குமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ★ வவுனியாவில்

# 300 குடும்பங்களை வெளியேறப் பணிப்பு

கொழும்பு, ஜூலை 29

வவுனியாவில் இறம்பைக்குளம், கோயில்க்குளம், வேலுக்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த எட்டு ஆண்டுகளாக வாழ்ந்து வரும் 300 குடும்பங்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு புளொட் அமைப்பினர் கூறியுள்ளனர் என்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

இம்மக்கள் 1990 ஆம் ஆண்டின் பின்னர் வடக்குக் கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வந்து இப்பகுதிகளில் வசித்து வந்தவர்களாவர்.

அண்மையில் புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதனும் அவரது மூன்று வயது மகனும் இறம்பைக்குளம் பகுதியில் வைத்து கிளைமோர் கண்ணிவெடிக்குப் பலியான சம்பவத்தினைத் தொடர்ந்தே புளொட் இயக்கத்தினர் இவ்வாறு கூறிவருகின்றனர்,

இத்தாக்குதலுக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாக புளொட் இயக்கத்தினர் சந்தேகிப்பதன் காரணமாகவே இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது —என்றும் இலங்கை வானொலி அறிவித்தது. (உ-6)

### மற்றுமொரு...

(முதலாம் பக்க தொடர்)

விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று குருநகர் கடற்பிராந்தியத்தில் இருந்து மீட்கப்பட்ட பெண்ணின் சடலமும் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை குடாக் கடலில் நீரில் மூழ்கிக் காணாமல் போனவர்களில் ஒருவரின் சடலமாக இது இருக்கலாம் என நம்பப்பட்டது.

இச்சடலம் இனம் காணும் பொருட்டும், மரண விசாரணையின் பொருட்டும் யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-15-139)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்)

இணைந்து கிழக்கிலும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. (உ-3-21)

# வவுனியாவில்நேற்று இருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 29

வவுனியா பம்பைமடுப் பகுயில் நேற்றுக்காலை இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் இரு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இவர்களிடம் இருந்து ஆறு கிரனேட்டுக்களும், ஒரு ஏகே 47 ரகத் துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இருவரின் சடலங்களும் நேற்று செஞ்சிலுவைச் சங்க வவுனியாக்கிளைச் செயலாளர் சிவநாதன் கிஷோரிடம் படையினரால் ஒப்படைக்கப்பட்டதாகவும்-

இன்று வன்னிக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-8162)

## ஒருவர் பலி!

மட்டக்களப்பு, ஜூலை 29

மட்டக்களப்பு கிரானில் நேற்று முன்தினம் இரவு சீருடையினரின் சூட்டுக்கு ஒருவர் உயிரிழந்தார். ப. நோ. கூ. சங்க காவலாளியான சோமநாதன் (27 வயது) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-3-21)

## இன்று 4 சேவைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பலாலிக்கும், இரத்மலானைக்கும் இடையில் 'லயன் எயர்' விமான சேவை இன்று நான்கு தடவைகள் நடைபெறும் எனத்தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சில் இருந்து கிடைத்தஉத்தரவையடுத்து நேற்று நிறுத்தப்பட்ட இரண்டாவது சேவையும் இன்றைய தினத்துக்குரிய மூன்று சேவையும் சேர்ந்து நான்கு சேவைகள் இன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-7)

# கொழும்பில் நாளை ஊழியருக்கு விடுமுறை

கொழும்பு, ஜூலை 29

தென் பகுதியில் இருந்து கொழும்பு வரும் தனியார் துறை ஊழியர்கள் அனைவருக்கும் நாளை வியாழக்கிழமை சம்பளத்துடன்கூடிய விடுமுறை வழங்கும்படி தொழிற்துறை அமைச்சர் ஜோன் செனிவிரத்ன கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் ''சார்க்'' மாநாட்டிற்கு வருகை தரும் தலைவர்கள் தென்பகுதிக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருப்பதனால் நாளை மறுதினம் கொழும்பு காலிவீதி போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டிருக்கும் என்றும் —

எனவே தனியார் துறை ஊழியர்கள் தமது நிறுவனங்களுக்குச் சமுகமளிக்க முடியாத நிலை தோன்றும் என்ற காரணத்தினாலேயே இக் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் —

அமைச்சர் தெரிவிந்தார்.

ஏறகனவே கொழும்பில் உள்ள அரச ஊழியர்களுக்கு நாளை விசேட விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (உ-6)

## உதவிப்பணம்

நெல்லியடி, ஜூலை 29

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அரசினரின் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு, ஜூன், ஜூலை ஆகிய இரு மாதங்களுக்கு உரிய கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை தொடக்கம் அவ்வப் பகுதித் தபால் நிலையங்கள் ஊடாக வழங்கப்படவிருக்கின்றது.

இதேவேளை, காசநோய், புற்றுநோய், தொழுநோய் போன்றவர்களுக்கு உரிய கொடுப்பனவும் வழங்கப்படும் என பருத்தித்துறை பிரதேச செயலக சமூக உத்தியோகத்தர் என். தர்மலிங்கம் தெரிவித்தார். (இ-9)

எமது புதிய CD வெளியீடு!

சூர்யா, ப்ரிதா நடித்த

சந்திப்போமா

விஜயகாந்தின்

தர்மா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(இ/4421)

### முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்)

காரணமாக நேற்று மதியம் வரை ஸ்தம்பித்தன.

முல்லைத்தீவு அரச அதிபர் எஸ். தர்மகுலசிங்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சென்று மக்களின் கோரிக்கையை அரசுக்கு அறிவிப்பதாகத் தெரிவித்து மக்களைச் சாந்தப்படுத்தியதை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

### சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்ட பின்னர் நேற்று முன்தினமிரவு அவர் நாடு திரும்பினார்.

தற்போது அவர் பூரண குணமடைந்துள்ளதாகவும்—

மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் அவர் ஓய்வெடுத்து வருவதாகவும்— ஈ. பி. டி. பி. பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்,

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்கு அவர் உத்தேசித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சர்ச்சைக்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்)

சமயம் இவ்வறு தெரிவித்தார்.

''பெரும் மனித புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் செம்மணிக்கு பொது மக்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை மக்கள் நடமாட்டம் இல்லாத ஏகாந்தமான இடமாக அது உள்ளது. ஊரடங்கு காரணமாக மாலை நேரத்துக்குப் பின் அந்தப்பக்கமே யாரும் போவதில்லை. எனவே மாலைக்குப் பின்னர் அங்கு என்ன நடந்தாலும் வெளியாருக்குத் தெரியாது. இந்தவாய்ப்பைப் பயன்படுத்தி செம்மணி மனித புதைகுழிகளிலிருந்து எலும்புக்கூடுகள் மற்றும் சடலங்களின் எச்சங்கள் அகற்றப்பட்டு விடலாம் என்ற அச்சம் குடாநாட்டு மக்கள் மனதில் உள்ளது. இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?''— என்று கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'',சட்டத்துக்கு முரணான வகையில்—செம்மணி நிலைமையைக் குழப்பும்விதத்தில்— எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. செம்மணிப் பகுதிஎந்தக் கிண்டல், கிளறலுமின்றி அப்படியே பாதுகாப்பாகப் பேணப்படும் என்ற உறுதியை மக்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

''இந்த விவகாரம் குறித்து விசாரிக்க இரகசியப் புலனாய்வுக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

''இக்குழுவோ அல்லது மனித உரிமைகள் ஆணைக் குழுவோ அல்லது நீதிமன்றத்தால் அதிகாரமளிக்கப்பட்ட எவருமோ, — சட்ட ரீதியான உத்தரவுடன் — வந்தால் செம்மணியில் எத்தகைய விசாரணைகளையோ அல்லது நடவடிக்கைகளையோ மேற்கொள்ள நாம் உதவியும் ஒத்தாசையும் வழங்குவோம்; அவர்களுக்கு [illegible] அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். போதனாவைத்திய சாலையின் முன்பாக வீதியோரத்தில் அநாதரவான நிலையில் காணப்பட்ட சைக்கிள் ஒன்று, கடந்த வாரம், யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளது.

இதுவரையும்இச்சைக்கிளை யாரும் உரிமை கோரவில்லை உரியவர்கள் தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களைக் காட்டி பெற்றுக்கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## ஆசீர்வாத நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 29

எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கும்நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியில் நாளை காலை 9 மணிக்கு நடைபெற விருக்கிறது.

அப்பாடசாலையில் இருந்து தோற்றும் மாணவர்களை அவர்களது பெற்றோர், ஆசிரியர், மதகுருமார் ஆசீர்வாதம் வழங்கி அவர்களுக்கான அனுமதி அட்டைகளைக் கையளிப்பர். (உ-3)

### ஆறு :

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டன.

பின்னர் நேற்று மாலை தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து உரையாடினார்கள்.

இன்றைய மாநாட்டில் பொருளாதார விடயங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும். தெற்காசியப் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு உந்து சக்தி அளிக்கவும் வறுமையைப் போக்கவும் சார்க் நாடுகள் கூட்டாகவும், தனியாகவும் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை மாநாட்டுத் தலைவர்கள் ஆராய்வார்கள் என்று அறிவிக்கப்பட்டது. (உ-6)

## ஹொக்கி ஆட்டங்கள்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும். இந்தச் சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 மணி:- யாழ். பல்கலைக்கழக அணிஎதிர்யாழ்ப்பாணக் கல்லூரி அணி

★ 5 மணி :- கிறாஸ்கொப்பர்ஸ் வி. க அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி. (உ-6)

## கொழும்பில் கிரனேட்டுகள் மீட்பு

கொழும்பு தெகிவளையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கிரனேட்டுக்களும் வேறு சில பொருள்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையில் போக்குவரத்துச் சேவை நடத்தும் தமிழர் ஒருவரின் வீடு திடீரெனச்சோதனையிடப்பட்ட சமயமே இப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-3)

### புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

உறுதியான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும்—

விடுதலைப்புலிகள் அமைப்புடன் பேச்சு நடத்தி தீர்வு காணுமாறு இலங்கையிடம் இந்தியா கோரவேண்டும் என்றும்—

கூட்டணித் தூதுக்குழு வாஜ்பாயிடம் கேட்கும் எனத் தெரியவந்தது. (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org